**அன்புக்குடும்பங்களே, தந்தை, மகன், தூய ஆவியார் நம் குடும்பங்களை வழிநடத்தவும், அவரின் அன்பை அறிந்துகொள்ளவும், நிரம்பி வழியவும் அவரை அனுமதியுங்கள்; இறைவேண்டல் செய்யுங்கள்.**






தயாரித்தவர்கள்:
கோலாலம்பூர் மாமறைமாவட்ட குடும்ப வாழ்வுப் பணிக்குழு

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்: apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 23/2023


கடவுளை முழுமையாக அன்பு செய்வதும், தன்னை அன்பு செய்வதுபோல அடுத்திருப்பவரையும் அன்பு செய்யவேண்டும் என்னும் இரண்டு பெரிய கட்டளைகள இயேசு நமக்குக் கொடுத்தார். இரண்டு கட்டளைகளும் ஒன்றுக்கொன்று வழிநடத்தி நிறைவடைகிறது. நாம் எங்கிருந்தாலும், இந்த உறவில், அன்பிற்கு தம்மையே உண்மையாகக் கொடுப்பது, பிறரை அரவணைக்க வழிவகுக்கும். இதில் நாம் தொடர்ந்து வளர்ந்து, கடவுளோடும், அனைத்து மக்கள் மற்றும் முழு படைப்போடும் முழுமையைக் காண உதவும்.

நிரம்பி வழியும் இந்த அன்பு, கடவுளை அன்பு செய்வதின் விளைவுகளைப் பார்க்க நமக்கு உதவுகிறது. இதனால் இரண்டாவது கட்டளையான அடுத்திருப்பவரை அன்பு செய்வது எளிதாகிறது. கடவுளை முழுமையாக அன்பு செய்ய சிறந்த வழி, **ஒருவர் தன்னை முழுவதுமாக அன்பு செய்ய வேண்டும்.ஏனென்றால் நாம் அனைவரும் கடவுளுடன் அன்பிலும் ஒற்றுமையிலும் உருவாக்கப்பட்டுள்ளோம்.** 1 யோவான் 4:10-11 கூறுவதுபோல "அவர் நம்மை முதலில் அன்பு செய்ததால் தான் நாம் அவரை அன்பு செய்கிறோம். நம்மை முழுவதுமாக அன்பு செய்யவும், நமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்யவும், நாம் கடவுளைத் தேடவும் அவரின் அன்பில் நிலைத்திருக்கவும் வேண்டும். இது கடவுளுடன் நெருக்கமான மற்றும் தனிப்பட்ட உறவுக்கு வழிவகுக்கிறது. இந்த நெருக்கமான உறவின் மூலம், நாம் யார் என்பதை அவர் நமக்கு வெளிப்படுத்தி, நம்மையே நாம் அன்பு செய்யவும், நமக்கு அடுத்திருப்பவரைஅன்பு செய்யவும் நம்மை வழிநடத்துகிறார்.

தூய தமரித்துவத்தின் வாழ்க்கையில், தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாரிமிருந்து இந்த அன்பு நிரம்பி வழிவதைக் காண்கிறோம். மறுபடைப்பு செய்ய நம்மை அழைக்கும் தந்தையின் படைப்பின் ஆற்றலையும், மீட்பதற்கு நம்மை அழைக்கும் மகனின் மீட்பையும், புதுப்பிக்க நம்மை அழைக்கும் தூய ஆவியாரின் புதுப்பித்தலையும் நாம் அனுபவிக்கின்றோம்.

அன்புக்குடும்பங்களே, தந்தை, மகன், தூய ஆவியார் நம் குடும்பங்களை வழிநடத்தவும், அவரின் அன்பை அறிந்துகொள்ளவும், நிரம்பி வழியவும் அவரை அனுமதியுங்கள். இறைவேண்டல் செய்யுங்கள். புதுப்படைப்பை உருவாக்க முயற்சிகள் எடுப்போம். நம்முடைய அன்றாட குடும்ப வாழ்க்கையில் நம்முடைய வழிகளை புதுப்பிக்கவும், மீண்டும் உருவாக்கவும் மீட்டெடுக்கவும் முயற்சி செய்யுங்கள். இதை நாம் நடைமுறைப்படுத்தும்போது, இயேசுவின் தூய இருதயம் மற்றும் மரியாவின் மாசற்ற இருதயத்தின் அன்பைப் பற்றிய சிறந்த புரிதலும் அனுபவமும் நமக்குக் கிடைக்கும். ✜


3 & 4 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

மூவொரு கடவுள் பெருவிழா


## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
தன்னை அன்பு செய்தல் மற்றும் அடுத்திருப்பவரை அன்பு செய்தல்

மாதாந்திர நிகழ்வு:
இயேசுவின் திரு இருதயம் & அன்னை மரியாவின் மாசற்ற இருதயம்



# கடவுளின் அன்பு நம் குடும்பங்களை வழிநடத்துகிறது. மற்றும் நிரம்பி வழிகிறது

**"உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக" என்பது முதன்மையான கட்டளை. "உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்பது இரண்டவது கட்டளை" இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை" என்றார். (மாற்கு 12: 30-31)**